சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.174/2020**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய நீ.ம.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாந்தி | தொழில் | இல்லத்தரசி |
| கணவர் பெயர் | இராஜேந்திரன் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | பெங்களூரு | வயது | 52 |

**02.02.2026 முதல் விசாரணை**

சாட்சிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு சாட்சி நேரில் ஆஜர். நீதிமன்ற சாட்சியின் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டு) **நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்றத்திலிருந்து அசல் உயில் ஆவணத்தை தாக்கல் செய்வதற்காக அழைப்பாணை வந்தது என்வசம் உள்ள எனது தகப்பனார் பலராமன் எழுதி வைத்த அசல் உயிலினை ஆஜர்படுத்துகிறேன். **அது நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (சாட்சி ஆகிய நான் பலராமன் என்பவரின் மகள் என்பதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யாததால் உயில் ஆவணம் குறியீடு செய்வதற்கு ஆட்சேபனை செய்யப்படுகிறது).**